**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்பாடி**

**முன்னிலை – திரு. S.K.P. திலிப்பாபு, M.A., M.L.,**

**நீதிமன்ற நடுவர், காட்பாடி**

**2026–ம் ஆண்டு ஜூலை மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை**

**CC.No.148/2022**

**CNR.NO. TNVL – 24 – 002255 – 2022**

அரசுக்காக காவல் ஆய்வாளர் மூலமாக,

காட்பாடி காவல் நிலையம்,

குற்றஎண்.252/2021

U/s. 5, 7(3), TNG ACT

269, 420 IPC

……………..குற்றமுறையீட்டாளர்

// எதிர்//

A1. ஜெயசந்திரன் (எ) பாலு த/பெ ரவிச்சந்திரன்

நெ.19/21 பெருமாள் கோயில் தெரு,

பென்னகர், கிராமம் மற்றும் அஞ்சல்,

செஞ்சி தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம்.

A2. ராஜேஷ்,(எ) புருஷோத்தமன் த/பெ நமச்சிவாயம்

தமிழ்சந்திரன், பெருமாள்கோயில் தெரு,

பென்னகர் கிராமம் அஞ்சல்,

செஞ்சி தாலுக்கா,

விழுப்புரம் மாவட்டம்.

A3. குமரேசன், த/பெ ராஜூ

நெ 26 பிள்ளையார் கோயில் தெரு,

சிப்காட், ராணிபேட்டை மாவட்டம்.

…….குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள்

| Sl.No | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | எதிரியின் விவரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | தந்தையின்/ கணவர் பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | காட்பாடி காவல் நிலையம், குற்றஎண்252/2021 U/s. 5, 7(3), TNG ACT 269, 420 IPC | . ஜெயசந்திரன் (எ) பாலு | ரவிச்சந்திரன் | -- | பென்னகர், கிராமம் மற்றும் அஞ்சல், செஞ்சி தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் | 28 |
| 2 | | ராஜேஷ்,(எ) புருஷோத்தமன் | நமச்சிவாயம் | -- | தமிழ்சந்திரன், பெருமாள்கோயில் தெரு, பென்னகர் கிராமம் அஞ்சல், செஞ்சி தாலுக்கா, விழுப்புரம் | 30 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | | குமரேசன் | ராஜூ | -- | நெ 26 பிள்ளையார் கோயில் தெரு, சிப்காட், ராணிபேட்டை மாவட்டம். | 42 |

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

| நிகழ்வு நாள் | புகார் கொடுத்த நாள் | எதிரியை கைது செய்த நாள் | எதிரியை பிணையில் விடுவித்த நாள் | சிறைக்குஅனுப்பி வைத்தது | வழக்கு விசாரணைஆரம்ப நாள் | வழக்குவிசாரணை முடிந்தநாள் | தண்டனை உத்தரவு | குற்றவாளி கள் மீதான தீர்ப்புரைக்குரிய தீர்வு முடிவின் நகலை ஒப்படைத்தல் | கால தாழ்விற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 20.05.2021 | 20.05.2021 | 20.05.2021 | 18.11.2022 | 20.05.2021 | 14.11.2022 | 16.06.26 | 02.07.26 | -- | NO DELAY |

இவ்வழக்கானது 30.08.2022-ம் தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு தன் முன்பாக விசாரணைக்காக வந்ததில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.E.ஜெயபாஸ்கர் அவர்கள் முன்னிலையாகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

1) கடந்த 20.05.2022 –ம் தேதி காலை 11.00 மணிக்கு காட்பாடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட VIT ROAD சூர்யா பாஸ்ட் புட் கடை பின்புறம் உள்ளகாலி இடத்தில் இதன் மார்ஜினில் கண்ட எதிரிகள் சமூகஇடைவெளியில்லாமல் கொரோனா தொற்றுநோய் பரப்பும் வகையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட வெளி மாநில லாட்டரி சீட்டுகளை பணம் சம்பாதிக்கும் எண்ணத்தில் பொதுமக்களை ஏமாற்றி விற்பனை செய்தவர்களிடமிருந்து லாட்டரி டிக்கெட்டுகள் மற்றும் ரூ 4400/– கைப்பற்றியதால் பிரிவு 5 r/w 7(3) Tamil Nadu Lottary Regulation Act படியும், பிரிவு 269, 420 IPC ன் படி குற்றம் புரிந்தவர்கள் ஆகிறார்கள். எனவே மூன்று எதிரிகள் மீது மேற்கண்ட பிரிவின்படி குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவணநகல்கள் அனைத்தும் பாரதிய நாகரிக் சுரக்ஷா பிரிவு 230–ன்கீழ் இலவசமாக வழங்கப்பட்டு அவைகளை பரிசீலனை செய்து பார்க்க தகுந்த சந்தர்ப்பமும் வாய்ப்பும் அளிக்கப்பட்டது.

3. பின்னர் வழக்கு ஆவணங்களை பரீசிலணை செய்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும் வழக்கிற்கான முகாந்திரம் உள்ளதால் எதிரிகள் மீது பிரிவுகள் 5 r/w 7(3) Tamil Nadu Lottary Regulation Act

269, 420 IPC ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றம் பற்றி வினவ எதிரிகள் குற்றத்தை பொய் என மறுத்துரைத்தனர். எனவே அரசுதரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் ஆவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரை குறியீடு செய்யப்படுகிறது.

5. **அரசுதரப்பு வழக்கின் சாட்சிகளின் சாட்சியத்தின் விபரம் பின்வருமாறு**

**அ)** அ.சா.1 முருகன் இந்நீதின்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது குடியாத்ததில் வசித்து வருகிறேன். தற்போது கே.வி.குப்பம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும். 20.05.2021 ம் தேதி காட்பாடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது காட்பாடி துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட உத்தரவுப்படி காவல் ஆய்வாளர் திரு.திருநாவுக்கரசு தலைமையில் தானும், தன்னுடன் காவலர் சத்தியராஜ், உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் பகல் 11.00 மணிக்கு விஜடி ரோடு சூர்யா பாஸ்ட் புட் அருகே கண்காணித்து சென்று கொரோனா காலம் என்பதால்

கூட்டமாக நிற்ககூடாது என்று அறிவுறுத்தி பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்தோம். அப்போது 3 நபர்கள் இரடைவெளி இல்லாமல் அந்த இடதத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களிடம் சென்று உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் விசாரித்தார். அவர்களிடம் விசாரித்தில் வெளியூரை சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. அவர்களை விசாரணை செய்ததில் லாட்டரி சீட்டு வைத்திருந்தார்கள். காவல் ஆய்வாளர் எதிரிகளை கைது செய்து எதிரிகளிடமிருந்து லாட்டரி சீட்டுகளை பறிமுதல் செய்து நிலையம் வந்து வழக்கு பதிவு செய்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

ஆ) அ.சா.2 சத்தியராஜ் இந்நீதின்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது திருமணியில் வசித்து வருகிறேன். தற்போது சத்துவாச்சாரி பணிபுரிந்து காவல் நிலையத்தில் சிறப்பு பிரிவு தலைமை காவலராக வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும். 20.05.2021 ம் தேதி காட்பாடி காவல் நிலையத்தில் காவலராக பணியில் இருந்த போது காட்பாடி துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட உத்தரவுப்படி காவல் ஆய்வாளர் திரு. திருநாவுக்கரசு தலைமையில் தானும், என்னுடன் சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன், உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் பகல்

11.00 மணிக்கு விஜடி ரோடு சூர்யா பாஸ்ட் புட் அருகே கண்காணித்து சென்று கொரோனா காலம் என்பதால் கூட்டமாக நிற்ககூடாது என்று அறிவுறுத்தி பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்தோம். அப்போது 3 நபர்கள் இரடைவெளி இல்லாமல் அந்த இடதத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களிடம் சென்று உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் விசாரித்தார். அவர்களிடம் விசாரித்தில் வெளியூரை சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. அவர்களை விசாரணை செய்ததில் லாட்டரி சீட்டு வைத்திருந்தார்கள் மற்றும் விற்பனை செய்வதாக விசாரணையில் தெரிய வந்தது. காவல் ஆய்வாளர் எதிரிகளை கைது செய்து எதிரிகளிடமிருந்து லாட்டரி சீட்டுகளை பறிமுதல் செய்து நிலையம் வந்து வழக்கு பதிவு செய்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார். சாட்சியம் அளித்துள்ளார்.

இ) அ.சா.3 மூர்த்தி இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில் தான் தற்போது லட்சுமிபுரத்தில் வசித்து வருகிறேன். தான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கின் ஆஜர் எதிரிகளை தெரியாது. தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 ஆவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக செய்யப்படுகிறது

செய்யப்படுகிறது. தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. செய்யப்படுகிறது. தேதி மாதம் ஞாபகமில்லை. ஒரு நாள் காட்பாடி காவல் நிலையம் அருகே போலிசார் கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

ஈ) அ.சா.4 ஆனந்தகுமார் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில் தான் தற்போது காட்பாடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதாரவளிக்காமல் பிறழ் சாட்சியம் ஆனதால் குவிமுச 311 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 20.05.2021 ம் தேதி காலை 11.00 மணியிளவில் காவல் ஆய்வாளர் திருநாவுக்கரசு என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது காட்பாடி காவல் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலரின் உத்தரவின் பேரில் வேலூர் விஜடி சூர்யா பாஸ்ட்புட் கடை அருகே உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன், இரண்டாம் நிலை காவலர் சத்தியராஜ் ஆகியோருடன் கொரோனா கால ஊரடங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட போது அங்கு சந்தேகத்தின் படியாக ஈடுபட்டிருந்த

நபர்களை பிடித்து விசாரித்த போது அவர்கள் ஜெயசந்திரன் என்கின்ற பாலு த/பெ ரவீந்திரன், ராஜேஷ் என்கின்ற புருஷோத்தமன் த/பெ தமிழ்சந்திரன், குமரேசன் த/ப ராஜி என தெரிய வந்தது. அவர்கள் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்ததை கொரோனா உத்தரவை மீறியும் தெரிந்து காலை 11.15 மணிக்கு காரணம் கூறி கைது செய்து மூன்று எதிரிகளில் ஒருவரான ஜெயச்சந்திரன் என்கின்ற பாலு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் மூர்த்தி, இம்தியாஸ் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். பின்னர் அந்த ஒப்புதல் வாக்குமூலம் அடிப்படையில் எதிரி ஜெயச்சந்திரன் என்பவரிடமிருந்து தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட DR 27 MANI 150 வரிசையில் 5 சீட்டுகளும், DR83 குமரன் 200 என்ற வரிசையில் 17 லாட்டரி சீட்டுகளும், DR83 DEAR 50 என்ற வரிசையில் 11 சீட்டுகளும் DR 83 KUYIL என்ற வரிசையில் 29 லாட்டரி சீட்டுகளும், VISHNU 250, 34 லாட்டரி சீட்டுகளும், சுவர்ணலட்சுமி என்ற பெயரில் 10 சீட்டுகளும், தங்கம் என்ற பெயரில் 34 லாட்டரி சீட்டுகளும், நல்ல நேரம் என்ற பெயரில் 27 லாட்டரி சீட்டுகளும், ROSA என்ற பெயரில் 30 லாட்டரி சீட்டுகளும் ஆக மொத்தம் 207 லாட்டரி சீட்டுகள், பணம் ரூபாய் 4400 மற்றும் ரிசல்ட் பேப்பர் 7 ஆகியவற்றை பகல் 12.00 மணிக்கு அதே

சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவம் இடம் மற்றும் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். அது முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு சொத்து எதிரிகளுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 252/2019 சட்டப்பிரிவு 5, 7(3) TNG Act மற்றும் 269, 420 இதச பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரிகளை தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். வழக்கு சொத்தை படிவம்–91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த படிவம்–91 அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு சொத்தான 1) MANI 5, 2)KUMARAN 17, 3) DEAR 11, 4)KUIL 29 5) VISHNU 34, 6)SWARNALAKSHMI 10, 7) THANGAM 34, 8) NALLANERAM 27, 9) ROSA 30, 10)RESULT PAPER 7 11)CASH Rs.4400 லாட்டரி சீட்டுகள் மற்றும் பணம் முறையே அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.11 வரை குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் இம்தியாஸ், மூர்த்தி, சிவகுருநாதன், முருகன், சத்தியராஜ்

ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது 31.05.2021 ம் தேதி சட்டப்பிரிவு 5, 7(3) TNG Act மற்றும் 269, 420 இதச பிரிவின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6) இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா.4 அரசுதரப்பு சாட்சிகள் எதிரிக்கு பாதகமாக அளித்த சங்கதிகள் குறித்து பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 351(1)(பி)–ன் கீழ் வினவ எதிரி அந்தப்பகுதிகளை பொய் என மறுத்துரைத்தனர். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சி உள்ளதா என்று கேட்டபோது இல்லை என்று கூறினர். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. <u>தீர்வுக்குரியபிரச்சனை</u>

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், அரசுதரப்பில் எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றமானது அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதாகும்.

8). இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவு 104 ன் படி எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டினை

நிரூபிக்கும் பொறுப்பு அரசுதரப்பை சார்ந்ததாகும்.

9) அரசுதரப்பில் எதிரிக்கு எதிரான குற்றசாட்டினை பொறுத்து நிரூபணம் செய்வதற்கு அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகளை விசாரணை செய்து, மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடுசெய்து, எதிரிக்கு எதிரான குற்றம் நிரூபணம் செய்யபப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

10) எதிரிகள் தன்மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யபப்பட்டுள்ளதாகவும், தனக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும், குற்றசம்பவத்தை பொறுத்து தன்மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யபப்பட்டிருப்பதாக கூறி வாதிடப்பட்டது.

11) அ.சா.1 , அ.சா.2 ரோந்து பணிக்காக அ.சா.4 உடன் சென்ற நபர்கள் ஆவார்கள். அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 20.05.2021 ம் தேதி காட்பாடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது காட்பாடி துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட உத்தரவுப்படி காவல் ஆய்வாளர் திரு.திருநாவுக்கரசு தலைமையில் தானும், தன்னுடன் காவலர் சத்தியராஜ், உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் பகல் 11.00 மணிக்கு விஜடி ரோடு சூர்யா பாஸ்ட் புட் அருகே கண்காணித்து சென்று

கொரோனா காலம் என்பதால் கூட்டமாக நிற்ககூடாது என்று அறிவுறுத்தி பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்தோம். அப்போது 3 நபர்கள் இரடைவெளி இல்லாமல் அந்த இடதத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களிடம் சென்று உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் விசாரித்தார். அவர்களிடம் விசாரித்தில் வெளியூரை சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. அவர்களை விசாரணை செய்ததில் லாட்டரி சீட்டு வைத்திருந்தார்கள். காவல் ஆய்வாளர் எதிரிகளை கைது செய்து எதிரிகளிடமிருந்து லாட்டரி சீட்டுகளை பறிமுதல் செய்து நிலையம் வந்து வழக்கு பதிவு செய்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் 20.05.2021 ம் தேதி காட்பாடி காவல் நிலையத்தில் காவலராக பணியில் இருந்த போது காட்பாடி துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட உத்தரவுப்படி காவல் ஆய்வாளர் திரு. திருநாவுக்கரசு தலைமையில் தானும், என்னுடன் சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன், உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் பகல் 11.00 மணிக்கு விஜடி ரோடு சூர்யா பாஸ்ட் புட் அருகே கண்காணித்து சென்று கொரோனா காலம் என்பதால் கூட்டமாக நிற்ககூடாது என்று அறிவுறுத்தி பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்தோம். அப்போது 3 நபர்கள் இடைவெளி

இல்லாமல் அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களிடம் சென்று உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் விசாரித்தார். அவர்களிடம் விசாரித்தில் வெளியூரை சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. அவர்களை விசாரணை செய்ததில் லாட்டரி சீட்டு வைத்திருந்தார்கள் மற்றும் விற்பனை செய்வதாக விசாரணையில் தெரிய வந்தது. காவல் ஆய்வாளர் எதிரிகளை கைது செய்து எதிரிகளிடமிருந்து லாட்டரி சீட்டுகளை பறிமுதல் செய்து நிலையம் வந்து வழக்கு பதிவு செய்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார். சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.3 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் பார்வை மகஜர் சாட்சி ஆவார். தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 ஆவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக செய்யப்படுகிறது. தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். தேதி மாதம் ஞாபகமில்லை. ஒரு நாள் காட்பாடி காவல் நிலையம் அருகே போலிசார் கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

13) அ.சா.4 இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவார். அவர் தனது சாட்சியத்தில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததை பற்றியும், சம்பவம் இடம் மற்றும் சுற்றுப்புறத்ததையும் பார்வையிட்டு சென்று மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்ததை பற்றியும் சாட்சிகளை விசாரணை செய்ததை பற்றியும், கைபற்றுதல் மகஜர் தயார் செய்ததை பற்றியும், படிவம் 91 தயார் செய்ததை பற்றியும், இறுதியாக இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை பற்றியும் தாக்கல் செய்துள்ளார். அவரது சாட்சியம் வழக்கு விசாரணைக்கு ஒத்தியதே ஆகும். அவரது சாட்சியம் புலன் விசாரணை சார்ந்தது ஆகும். எதிரியை இவ்வழக்கோடு தொடர்புபடுத்த அரசுத்தரப்பில் வேறு எந்தவொரு சாட்சியும் முன்னிலைபடுத்தவில்லை.

14) மேற்படி வழக்கில் எதிரிகள் லாட்டரி சீட்டை விற்பனை செய்ததாகவும் பணத்தை கைப்பற்றியதாகவும் எந்த ஒரு பொது நபரும் கண்ணுற்ற சாட்சியும் பார்க்கவில்லை. மேலும் அ.சா.1, அ.சா.2, ஒரே காவல் நிலையத்தில் பணிபுரியும் நபர்கள் ஆவார்கள். அவர்களை தவிர யாரும் சாட்சியம் அளிக்காத நிலையில் இந்த வழக்கு குறித்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது. மேலும் எவ்வளவு பணம் வைத்து என்ன விளையாட்டு எதிரிகள் விளையாடினார்கள் என்று குறிப்பிட்டு இறுதி அறிக்கையில்

குறிப்பிடபடவில்லை. அந்த விவரங்களைப் பற்றி விசாரணை அதிகாரி எந்த ஒரு விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேலும் பணத்தை யாரிடமிருந்து எந்த விளையாட்டை பணையம் வைத்து விளையாடினார்கள் என்றும் எந்த சமயத்தில் குறிப்பிட்டு விளையாடும் போது கைது செய்யப்பட்டது என்று எந்த ஒரு விசாரணையும் மேற்கொள்ளவில்லை. எனவே இவ்வழக்கு குறித்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது. எனவே அந்த பலனை எதிரிக்கு வழங்கி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

15) அ.சா.4 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை வைத்து எதிரியை தண்டிப்பதற்கு போதுமானதாக சாட்சியங்களாக அமையவில்லை. எனவே அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16) எனவே இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.4 வரை சாட்சியமாக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் மூலம் எதிரிகள் மீதான 5 r/w 7(3) Tamil Nadu

Lottary Regulation Act 269, 420 IPC கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசுதரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை, எனவே எதிரி மேற்படி பிரிவுகளின் கீழான குற்றத்தில் குற்றவாளி என்பதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுதரப்பில் நிரூபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. (சி.பி.எண்.231/2021)

**<u>17) முடிவாக</u>**

i) எதிரிகளுக்கு எதிரான 5, 7(3) Lotteries Regulation Act, 269, 420 IPC ன் கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகளின் சந்தேகத்தின் பலனை நல்கி மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிகள் குற்றவாளி அல்ல என முடிவுசெய்து பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 271(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

18) **<u>சொத்து பற்றிய ஆணை</u>**: இவ்வழக்கில் சி.பி.எண்.231/2021 கைப்பற்றப்பட்ட லாட்டரி சீட்டுகள் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழித்திட உத்தரவிடப்படுகிறது. பணம் ரூ 4400 அரசுடைமையாக்க உத்தரவிடப்படுகிறது.

அ.சா.பொ.1 –MANI– 5

அ.சா.பொ.2– KUMARAN 17

அ.சா.பொ.3 – DEAR– 11

அ.சா.பொ.4 – KUIL – 29

அ.சா.பொ.5 – VISHNU 34

அ.சா.பொ.6 – SWARNALAKSHMI 10

அ.சா.பொ.7 – THANGAM 34

அ.சா.பொ.8 – NALLANERAM 27

அ.சா.பொ.9 – ROSA 30

அ.சா.பொ.10 – RESULT PAPER – 7

அ.சா.பொ.11 – CASH 4400

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 02 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இத்தீர்ப்பு என்னால் பகரப்பட்டது.

S K P DILIP BABU — Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| வ.எண் | சாட்சிகளின் விபரம் |
|---|---|
| அ.சா.1 | முருகன் |
| அ.சா.2 | சத்தியராஜ் |
| அ.சா.3 | மூர்த்தி |
| அ.சா.4 | ஆனந்தகுமார்(விசாரணை அதிகாரி) |

**அரசுதரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | சான்றாவண விபரம் |
|---|---|
| அ.சா.ஆ.1 | ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.2, | பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ 4 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ 5 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ 6 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ 7 | படிவம்−91 |

எதிரி தரப்பு சாட்சி : இல்லை

எதிரி தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

**<u>சான்று பொருள்</u>**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | MANI– 5 |
| அ.சா.பொ.2 | KUMARAN 17 |
| அ.சா.பொ.3 | DEAR– 11 |
| அ.சா.பொ.4 | KUIL – 29 |
| அ.சா.பொ.5 | VISHNU 34 |
| அ.சா.பொ.6 | SWARNALAKSHMI 10 |
| அ.சா.பொ.7 | THANGAM 34 |
| அ.சா.பொ.8 | NALLANERAM 27 |
| அ.சா.பொ.9 | ROSA 30 |
| அ.சா.பொ.10 | RESULT PAPER – 7 |
| அ.சா.பொ.11 | CASH 4400 |

**குறிப்பு**

1. வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

3. விசாரணை காலத்தில் எதிரி காவல்நிலைய பிணையில் இருந்தார்.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,

காட்பாடி.